**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – அறிவிப்புகள் – 2018–2019ஆம் ஆண்டு – நுண்கலைகளையும் நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு மொத்த நிதியொதுக்கத்தினை ரூ.100.00 இலட்சத்திலிருந்து ரூ.265.00 இலட்சமாக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (நிலை) எண். 11

நாள்: 30–01–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விளம்பி வருடம், தை 16

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண் 243, சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் துறை, நாள் 15.10.2013
2. கலை பண்பாட்டு ஆணையரின் கடித ந.க எண் 3847/இ1/2018, நாள் 18.07.2018

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி "நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு கலை பண்பாட்டுத் துறை சார்பாகவும், பிற அரசுத்துறை / தனியார் அமைப்புகளுடன் இணைந்தும் தமிழகம் முழுவதும் கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.06.2018 அன்று கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு அமைச்சர், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:–

"தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாக்கவும்,.கலைஞர்களை ஊக்குவிக்கவும், மக்களிடையே பண்பாடு சார்ந்த விழிப்புணர்வை மேம்படுத்திடவும், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் தமிழ் பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்திடவும், கிராமியக் கலைஞர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் கிராமியக் கலை விழாக்களை அனைத்து மாவட்டங்களில் நடத்திடவும் முயற்சிகளை எடுத்துவரும் கலை பண்பாட்டுத் துறையின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில், 2013–2014 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு மொத்த நிதியொதுக்கமான ரூ.100 இலட்சத்தினை, ரூ.300 இலட்சமாக உயர்த்தி வழங்க, தொடரும் செலவினமாக ரூ.200 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்".

3. தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கவும், மக்களிடையே தமிழ் பண்பாடு சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், பிற மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் தமிழ் பண்பாட்டுக் கலை நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்திடவும், கிராமியக் கலைஞர்களுக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் கிராமியக் கலை விழாக்களை அனைத்து மாவட்டங்களில் நடத்திடவும், அதற்கான முயற்சிகளை எடுத்து வரும் கலை பண்பாட்டுத் துறையின் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்யும் வகையில் 2013–2014ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ஒரு மொத்த நிதியொதுக்கமான ரூ.100 இலட்சத்துடன் கூடுதலாக ரூ.200 இலட்சம் சேர்த்து 2018–2019ஆம் நிதியாண்டில் ஒட்டுமொத்த தொகை ரூ.300 இலட்சமாக உயர்த்தி உரிய அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டு ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. கலை பண்பாட்டு ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் ஒரு மொத்த நிதியொதுக்கத்தினை ரூ.100.00 இலட்சத்திலிருந்து ரூ.265.00 இலட்சமாக தொடரும் செலவினமாக கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கியும், இதற்கென 2018–2019ஆம் நிதியாண்டில் கூடுதலாக ரூ.1,65,00,000/– (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் அரசு ஆணையிடுகிறது :–

| வ. எண் | திட்டங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள் வாயிலாக தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் செவ்வியல் மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், கலைப் பயிற்சிகள், இதர விழாக்கள் நடத்துதல்<br>31X2,00,000=ரூ.62,00,000/–<br>சென்னை மாவட்டத்திற்கு ரூ.3,00,000/– ஆக மொத்தம் ரூ.65,00,000/– | 65,00,000/– |
| 2. | அயல்நாடுகளுக்கிடையேயான கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் (Organizing cultural programmes abroad) | 50,00,000/– |
| 3. | மாநிலங்களுக்கிடையேயான கலைப்பரிமாற்ற திட்டத்தின் கீழ் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் (Organizing programmes in other states) | 40,00,000/– |
| 4. | தமிழகத்தின் பாரம்பரியத்தை விளக்கும் வகையில் தனியார் கலை அமைப்புகளால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்குதல் | 15,00,000/– |
| 5. | அனைத்து மாநிலக் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் வகையில் மாநிலக் கலைவிழா (State Cultural Festival) நடத்துதல் | 25,00,000/– |
| 6. | மார்கழி இசைவிழா (Margazhi Music Festival) நடத்துதல் | 15,00,000/– |
| 7. | நுண்கலைத் திட்டங்கள்<br>அ) நுண்கலை கண்காட்சி (State Level Art Exhibition) ரூ.15.00 இலட்சம்<br>ஆ) ஓவிய சிற்பக் கலைஞர்கள் முகாம் ரூ.5.00 இலட்சம்<br>இ) ஓவியச் சந்தை ரூ.10.00 இலட்சம் | 30,00,000/– |

| | | |
|---|---|---|
| 8. | கலை பண்பாட்டுத் துறையால் செயல்படுத்தப்படும் புதிய கலைப்பணித் திட்டங்கள் | 10,00,000/– |
| 9. | சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விழாக்கள் நடத்துதல் | 15,00,000/– |
| | மொத்தம் | 2,65,00,000/– |

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும் :–

"2205 –00 கலையும் பண்பாடும் – 102 கலை மற்றும் பண்பாட்டை வளர்த்தல் – மாநிலச் செலவினங்கள்

| -JA- கலைப் பணிகளுக்கான ஒரு மொத்த நிதியொதுக்கம் | JA Lumpsum provision for Cultural Activities | வரவு செலவு திட்டம் 2018–2019 (ரூபாய் இலட்சத்தில் | திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கம் RE/FMA 2018-2019 (ரூபாய் இலட்சத்தில்) | த.தொ.கு DPC |
|---|---|---|---|---|
| 09-உதவித் தொகை | 09 Grants – in-Aid | 100.00 | 265.00 | 2205–00–102 JA 0906 |
| 01 நடப்புச் செலவுக்கான உதவித் தொகை | 01 Grants for Current Expenditure | 3.00 | 65.00 | 2205–00–102 JA 0915 |
| 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை | 03 Grants for Specific Schemes | 97.00 | 200.00 | 2205–00–102 JA 0933 |

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதுத்துணைப் பணியாகும்". இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொ–I)த் துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும் அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினைக் கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ"வின்படி இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொ–I)த் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–19ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் இதற்கான குறிப்புடன் நிதி (வ.செ.பொ–1/கல்வி–II)த் துறைக்கு அனுப்புமாறும் கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. நுண்கலைகளையும், நிகழ்த்துக் கலைகளையும் போற்றிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் ஒரு மொத்த நிதியொதுக்கத்தினை ரூ.100.00 இலட்சத்திலிருந்து ரூ.265.00 இலட்சமாக உயர்த்தி வழங்கும் நிலையில், கலைப்பணித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான திருத்திய வழிமுறைகளை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா எண். 2767/நிதி(கல்வி–II)துறை/2019, நாள் 29.01.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண் 2587 (இரண்டாயிரத்து ஐநூற்று எண்பத்து ஏழு) –இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
இணை இயக்குநர் / உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,
திருச்சிராப்பள்ளி / தஞ்சாவூர் / மதுரை / திருநெல்வேலி / கோயம்புத்தூர் / சேலம் / காஞ்சிபுரம்
(கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், நிதித்துறை, சென்னை–9
நிதி (கல்வி–II/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை– 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை– 9
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண்–1 / பொது–2) துறை, சென்னை– 9
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/01/19
பிரிவு அலுவலர்

30/1/19